MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME – III ISSUE - I
AUG -2025 E-ISSN : 2584 – 1238

# இசையும் கலைஞர்களும் இலக்கியங்களில் பெற்றிருந்த இடம்

முனைவர் **வீ.முத்துலட்சுமி**
உதவிப்பேராசிரியர், **முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை**,
தி ஸ்டாண்டர்டு ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி, சிவகாசி.
DOI 10.5281/zenodo.16434179.

**Abstract :**

**The ancient Tamils divided 'Tamil' into three major categories. In it, 'Music' occupies a very important place. Music is the most ancient of the 'arts'. It is said that there is no living being that is not enchanted by music. Music has the power to melt even the most hardened heart and make us love. Music appears as soon as the string becomes long. Music takes root in the length and breadth of the string, and in the widening of the string.**

**Key Words : Ancient Tamil - Music - Instruments - Old Tamil Musicians**

## முன்னுரை :

பண்டைத்தமிழர் „தமிழை" முப்பெரும் பிரிவுகளாகப் பிரித்திருந்தனர். அதில் „இசை" மிக முக்கிய இடத்தைப் பெறுகிறது. இசை „கலைகளுள்" மிகத் தொன்மையானது. இசைக்கு மயங்காத உயிர்களே இல்லை எனலாம். கல்மனத்தையும் கரையச் செய்து அன்பு கொள்ளச் செய்யும் ஆற்றலைப் பெற்றது இசைக்கலை. குறில் நெடிலாகும் போதே இசைமை தோன்றிவிடுகிறது. நெடில் அளபெடையாய் நீளும் நீட்டத்திலும், விளியாக கொள்ளும் நெட்டிசைப்பிலும் இசை கால்கொள்கிறது.

**"அளபிறந் துயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்**
**உளவென மொழிப இசையொடு சிவணிய**
**நரம்பின் மறைய என்மனார் புலவர்"1**

எனத் தொல்காப்பியர் இசையோடு பொருந்தி யாழ் நூலில் இசையின் தன்மை பெறும் இடத்தைச் சுட்டுகிறார்.

**"இசை என்றால் மக்கள் உள்ளத்தோடு பொருந்துதல் எனப் பொருள் படும். இசை இனிமையான ஒலிகளின் சேர்க்கையாகும். இது உயிர்களின் உள்ளத்தை உருக்கும் தன்மை வாய்ந்தது. இனிமைமிக்கது. எழில் வாய்ந்தது. மக்களுக்கு மகிழ்ச்சியூட்டும் தன்மையும் எழுச்சியும் வன்மையும் அமையப் பெற்றதாய் இருக்கிறது."2**

இசை காதினால் கேட்டு இன்புறத்தக்க இன்கலையாகும். அது ஆதிகாலத்தில் மனிதனை விலங்குகளில் இருந்து காப்பாற்றவும் பாதுகாக்கவும் தோன்றின எனலாம். பின்னாளில் இசை பல்வேறு காரணங்களால் பல்வேறு வகைகளாக வளர்ச்சியடைந்தது எனக் குறிப்பிடலாம்.

இசை என்னும் சொல்லுக்கு „இசைவிப்பது," „தன்வயப்படுத்துவது" என்ற இருபொருள்களைக் கொண்டது. மரம், செடி, கொடி என்னும் ஓரறிவுயிர் முதல் மக்கள் என்னும் ஆறறிவுயிர் ஈறாக உயிர்கள் அனைத்தையும் இசை தன்வயப்படுத்தவல்லது.

## இசையின் தோற்றம் :

ஆதிகாலத்தில் மனிதன் கல்லாலும், வில்லாலும் எளிதில் விலங்குகளைக் கொன்றான்;. அவற்றின் ஊனை உணவாகத் தின்றான். அவைகளின் எலும்பை ஆயுதமாகக் கொண்டான். தோலைப் பறையாக உருவாக்கினான். உடையைப் போர்வையாக அணிந்தான்.


http://Creativecommons.org//license/by/4.0/.

மக்கள் விலங்குகளோடு நடத்திய போரில் விலங்கின் பல்லால், நகங்களால் உடம்பு சேதமுறாமல் அவர்கள் அரையில் அணிந்த தோலாடையும் மேலே போர்த்திய தோல் போர்வையும் பாதுகாத்தன. தோலால் செய்யப் பெற்ற துடியும், பறையும், முரசும் மக்களுக்கு ஊக்கமூட்டின. விலங்குகளை அதிர வைத்தன. அத்தகைய அதிர்வுகளில் இருந்தும் முறையற்ற ஓசைகளிலிருந்தும் இசை தோன்றியிருக்கலாம்.

**இசைக்கலையின் ஆற்றல் :**

உயர்திணை உயிர்கள் மட்டுமன்றி அஃறிணை உயிர்களும் இசையில் மயங்கும். குத்துக்கோல்காரர்களின் அடக்கு முறைக்குக் கட்டுப்படாது மதங்கொள்ளும் யானை கூட யாழிசைக்குக் கட்டுப்பட்டு நிற்கும் என்பதும் கடவுளின் சினத்தைத் தணிப்பதற்காகச் சீறியாழ்ப்பாணர்கள் அக்கடவுளின் முன்னால் சீறியாழை இசைத்து சினம் தணிவித்தனர். அரண்மனையில் அரசனை துயிலச் செய்வதற்கும் அவனைத் துயில் எழுப்புவதற்கும் இசைக் கலைஞர்கள் நியமிக்கப்பட்டனர் என இசையின் ஆற்றலைச் சங்க இலக்கியச் சான்றுகள் எடுத்தியம்புகின்றன.

**தொல்காப்பியத்தில் இசைக்கருவிகள் :**

பழம்பெரும் நூலாகிய தொல்காப்பியத்தில் பறையும் யாழும் நானில மக்களின் கருப்பொருளாகக் கொள்ளப்பட்டது.

> **"தெய்வம் உணவே மாமரம் புள்பறை**
> **செய்தியாழின் பகுதியொடு தொகை.**
> **அவ்வகை பிறவும் கருவென மொழிப"**[3]

பறை என்பது மக்கள் விலங்குகளோடு ஆற்றிய போரில் அவர்களுக்கு ஊக்கம் அளிக்கவும் ஒருவரோடொருவர் நடத்திய போரில் வெற்றியிலும் போர் முரசாகவும் வெற்றி முரசாகவும் பயன்படுத்தப்பட்டது. அதன்பின் அறுவடைசெய்தல், தேர் இழுத்தல், கல் உடைத்தல் முதலிய தொழில்களில் மக்களுக்கு உற்சாகம் ஊட்டவும் பறை முழக்கப்பட்டது.

**பண்**

பண் இசையின் தொகுதியாகும். பண் இசையின் உள்ளுயிராக அமைந்திருக்கிறது. **"பண் என்றால் ஓர் உற்றறியும் பண்பாற்றல் சார்ந்த பொருளாகக் கொள்ளப்படுகிறது. பண்ணின் பெயரை வைத்து விளக்கங் கூறுவதனால் உள்ளத்தில் உந்தும் உறுபொருளின் ஒரு விளக்கப் பொருளாகத் திகழ்கிறதாகக் கூறலாம். அது முதலில் உள்ளத்தில் அமைவாய் உருப்பெற்று அப்பால் ஒலி அமைப்பு உருவில் உந்தி எழுகிறது. எனவே பண் அமைப்பு முறையில் உள்ளம் உடல் ஆகிய இரண்டும் இசைந்து இயங்குகின்றன என்று எண்ணலாம்"**[4]

பண் என்பதை வடநூலார் இராகம் என்று வழங்குவர். இசை அலகுச் சேர்க்கையால் வந்த வண்ணம் பண் ஆகிய இரண்டும் நிகழும் பொழுது கால அளவாகிய பாணியும் சேர்ந்து பண் ஆகிறது.

இசைநூல்கள்

பண்டைக்காலத்தில் இசைத்தமிழ் நூல்கள் இருந்திருக்கின்றன. இசைப்பாட்டாகிய பரிபாடல்களையும், முதுநாரை, முதுகுருகு என்னும் நூல்களையும் முதற்சங்க காலத்தில் இயற்றினார்கள் என்று இறையனார் அகப்பொருள் உரை குறிப்பிடுகிறது. அவை இசைத்தமிழ் நூல்கள் என்று தெரிகின்றன.

அடியார்க்கு நல்லார் „இசைத்தமிழ் நூலாகிய பெருநாரை, பெருங்குருகு தேவவிருடி நாரதன் செய்த பஞ்சபாரதீயம் முதலாயுள்ள தொன்னூல்களும் இறந்தன" என்று சிலப்பதிகார உரைப்பாயிரத்தில்


http://Creativecommons.org//license/by/4.0/.

எழுதியிருக்கிறார். அடியார்க்கு நல்லார் கூறுகின்ற பெருநாரை, பெருங்குருகும், இறையனார் அகப்பொருள் உரை கூறுகின்ற முதுநாரை, முதுகுருகும் ஒன்று போலும். தமிழகத்தில் இருந்த எண்ணற்ற இசை நூற்களில் பல மறைந்தொழிந்து போய்விட்டன எனத் தெரிகிறது. முதல் ஊழியில் இயற்றப் பெற்ற அகத்தியம் பஞ்சபாரதீயம், பரதம் போன்ற இசை நூற்களும் பேரியாழும் அழிந்தனவாம். இடைச்சங்க காலத்தில் எழுந்த முறுவல், சயந்தம், குணநூல், செயிற்றியம் போன்ற பல இசை நூற்களும் இறந்துபட்டனவாம். அடியார்க்கு நல்லார் காலத்தில், சிலப்பதிகார உரை எழுதப் பின்வரும் நூல்கள் துணையாக அமைந்தன எனலாம். **அகத்தியம்:** அகத்தியம் என்னும் அரிய நூல் இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ் இலக்கணத்தையும் விளக்கிக் கூறும் ஓர் அரும்பொருள் இலக்கணக் கருவூலமாகும். அது தென்மதுரை என்னும் மூதூரில் இருந்து முதற்சங்கப் புலவராகிய அகத்திய முனிவரால் அருளப்பெற்றது. அந்த நூல் நச்சினார்க்கினியர் காலத்திற்கு முன்பே மறைந்து போயிற்று. **இசை நுணுக்கம்:** இசை நுணுக்கம் சாரகுமாரன் அல்லது சயந்தகுமாரன் என்னும் அரசகுமாரன் இசை அறிவதற்காக அகத்திய முனிவரின் பன்னிரு மாணவருள் ஒருவராகிய சிகண்டி முனிவரால் வெண்பாவினால் இயற்றப்பெற்ற இசைத்தமிழ் நூல் ஆகும். **இந்திரகாளியம்** : இது யாமளேந்திரர் என்னும் இசைநூல் வல்லுநர் இயற்றிய இசைநூல். அதனை அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார உரையில் மேற்கோளாக எடுத்தாண்டிருக்கிறார். இன்று இதுவும் மறைந்துவிட்டது.குணநூல்: குணநூல் முற்காலத்தில் இருந்த நல்ல நாடகத்தமிழ் நூற்களில் ஒன்றாக எண்ணப்படுகிறது. அந்நூல் அடியார்க்கு நல்லார் காலத்திற்கு முன்பாகவே மறைந்துவிட்டது. சில சூத்திரங்கள் மட்டும் அடியார்க்கு நல்லார்க்கும் கிடைத்துள்ளன. பஞ்சபாரதீயம்: பஞ்சபாரதீயம், நாரதமுனி நவின்ற நற்றமிழ் இசை நூலாகும். அந்நூல் அடியார்க்கு நல்லார் காலத்திலே மறைந்துவிட்டது. வடமொழியில் நாரதர் எழுதிய சிக்சா என்றொரு நூல் இன்றும் உள்ளது. அதற்கும் பஞ்சபாரதீயத்திற்கும் உள்ள தொடர்பு தெரியவில்லை. பஞ்சபாரதீயம் எழுதிய நாரதனும், சிக்சா எழுதிய நாரதனும் ஒருவராக இருக்க முடியாது என்று தமிழ் அறிஞர்கள் கூறுகிறார்கள். இந்தியாவில் தென் இந்திய இசை மரபை நாரதர் மரபென்றும், வட இந்திய இசை மரபை அனுமன் இசை மரபு என்றும், இந்தியாவில் மேற்குப் பகுதிகளின் இசை மரபைத் தும்புரு இசை மரபு என்;றும் கூறுவாருண்டு.

பஞ்சமரபு: பஞ்சமரபு, ஒரு பழைய இசைத்தமிழ் நூலாகும். அறிவனார் என்ற ஆசிரியரால் இயற்றப்பெற்றது. கோவை மாவட்டத்தில் தமிழ்ப்புலவர் தெய்வசிகாமணி கவுண்டர் அவர்களிடத்தில் இருக்கிறது எனப் புலவர் கூறுகின்றனர். இப்போது பஞ்சமரபு நூலானது உரையோடு அச்சிடப்பட்டுள்ளது. 240 வெண்பாக்களால் முற்றுப் பெறுகிறது. பாயிர உரையில், “ஆதி அயன்படைத்த ஆழி யுலகத்துதுள் ஓதிய கீத வழியெல்லாம் - நீதியினால் ஐந்து திறனும் விரவி வருதலால் பஞ்ச மரபென்று பார்.” (பஞ்சமரபு பாயிரம்) ஐந்து திறனானது „இசையும் முழவும் கூத்தும் தாளமும் அபிநயமும்" என்பதாகும் என தமிழிசை இலக்கண வரலாற்றில் மு.அருணாச்சலம் குறிப்பிடுகின்றார். பஞ்ச மரபு என்பதற்கு நரம்பு, குழல், கண்டம், தோல், கூத்து ஆகிய ஐந்து மரபு உறுப்புகளைக் கொண்டது என்று பொருள் கூறுவார் உண்டு. இதனை பஞ்ச மரபின் நான்காவது நூற்பா,

**“நல்ல நரம்பு குழல்கண்டம் தோல்கூத்து**
**பல்லபொருட் கூடுகின்ற பாணியுடன் சொல்லிமலர்க்**



http://Creativecommons.org//license/by/4.0/.

**கையால் அவிநயமுங் காட்டுதல்காண், காரிகையாய்!**
**பொய்யாத நூலின் பொருள்."** (பஞ்சமரபு.பா.4)

எடுத்தியம்புகின்றது.

**பரதசேனாபதியம் :**

ஆதிவாயிலார் என்னும் ஆசிரியரால் வெண்பாவாகச் செய்யப் பெற்ற நாடகத்தமிழ் நூலாகும். அந்நூலும் மறைந்து போய்விட்டது. பரதசேனாபதியம் என்றொரு நூல் உ.வே.சுவாமிநாதஐயர் அவர்கள் நூல் நிலைய வெளியீடாக வெளிவந்துள்ளது. இந்நூலிற்கும் ஆதிவாயிலார் எழுதிய பரதசேனாபதிற்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்பது தெளிவாக விளங்குகிறது.

**பரதம் :**

பரதம் என்பது ஒரு பழம்பெரும் நாடகத்தமிழ் நூலாகும். வடமொழியில் உள்ள பரத சாத்திரம் முழுவதும் தமிழ்நாட்டு ஆடற்கலையை விளக்குவதாகும் என்பது முழு உண்மையாகும். மொழி வடமொழியாயினும் கருத்தெல்லாம் தமிழ் ஆடற்கலையே என்று அறிஞர் கருதுவர்.

பெருங்குருகு

பெருங்குருகு முதுபெரும் இசை நூலாகும். அந்நூல் அடியார்க்கு நல்லார் காலத்திற்கு முன்பே மறைந்துவிட்டது. பெருங்குருகு, முதுகுருகு என்றும் கூறப்படுகின்றது.

பெருநாரை

பெருநாரையை இயற்றியவர்கள், முதற்சங்க முத்தமிழ்ப் புலவர்களாவர். இசை நூற்களில் ஒன்று. அடியார்க்கு நல்லார் காலத்திற்கு முன்பே மறைந்துவிட்டது.

**இசைக்கருவிகள்**

இசைப்பாட்டிற்கும், பரதநாட்டியத்திற்கும், கூத்துக்கலைக்கும் இசைக்கருவிகள் (பக்கவாத்தியங்கள்) இன்றியமையாதவை ஆகும்.

இசைக்கு உரிய ஓசைகள் ஐந்து பொருள்களில் உண்டாகின்றன. அப்பொருள்கள் தோல்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி, மிடற்றுக் (கழுத்து) கருவி என்பன. அவற்றில் உண்டாகும் ஓசைகளை ஒழுங்குபடுத்தி இசையை அமைத்தனர். சங்ககாலப் பண்களும் இசைக்கருவியும்

சங்ககாலத் தமிழர் பண்களைப் பல்வேறு இசைக்கருவிகள் துணையோடு இசைத்துப் பாடியுள்ளனர். யாழ், கின்னரம், குழல், சங்கு, தூம்பு, வயிர், தண்ணுமை, முழவு, முரசு, பறை, கிணை, துடி, தடாரி, பதலை, எல்லரி, ஆகுளி, மந்தரி, முதளி, தில்லரி, பம்மை, கொட்டு, பாண்டில், இன்னியம் முதலான இசைக்கருவிகள் இருந்துள்ளன.

சங்ககாலத்தில் இசைக்குப் பண் என்று பெயர். அந்நாளில் மக்கள் தம் நிலத்திற்கேற்ப சிறப்புடைய யாழ், பண், பறை போன்ற இசைக் கூறுபாடுகளை வளர்த்து வந்தனர். ஓசையை ஏழு வகைகளாகப் பிரித்தனர். குரல், தாரம், உழை, இளி, துத்தம், விளரி, கைக்கிளை என்ற ஏழிசையை அடிப்படையாகக் கொண்டு தமிழ் மக்களால் வளர்க்கப்பட்டதே இசைக்கலையாகும். இசையில் ஆடவரைக் காட்டிலும் பெண்டிரே முதலிடம் பெற்றனர். மகளிர் தம் இசையால் யானையையும் அடக்கும் திறன் படைத்தனர். தினைப்புனம் காக்கும் போது இசைபாடிக் காப்பர். போரில் புண்பட்ட தன் கணவர் நோயைத் தாம் பயின்ற இன்னிசையாகிய மருந்தினால் தணிவித்தனர் என்பதை,

**"நெடுவசி விழுப்புண்டனிமார் காப்பென**
**வறல்வார் கூத்தற் கொடிச்சியார் பாடல்"** (மலை.302-304)

என்று மலைபடுகடாம் சுட்டிக் காட்டுகின்றது.



http://Creativecommons.org//license/by/4.0/.

சங்ககால வாழ்வில் இசையும் கூத்தும்

கூத்தின் வழியாக வழிபாடுகள் நிகழப் பின்னணிப் பாடல்களே உதவின.

**"சீர்மிகு நெடுவேள் பேணித் தழூஉப் பிணையூஉ"**5

பாட்டின் காரணமாகவே கூத்து காதலர்க்கும் மிகுதியும் பயன்பட்டதென்று அறியமுடிகிறது. தலைவனது பரத்தையர் ஒழுக்கத்தை குறிப்பாகக் கண்டித்துணர்த்த விரும்பின. தலைவி கூத்து நிகழுகையில் அமைந்த பின்னணிப்பாடலில் வைத்து அதனை உணர்த்துகிறாள்.

**"தூங்கும் குரவையுள் நின் பெண்டிர் கேளாமை
ஆம்பல் குழலால் பயிர் பயிர் எம்படப்பை
காஞ்சிக் கீழ்ச்செய்தேம் குறி"**6

வேத்தியல் முறையில் அரசரை வாழ்த்தும் முகத்தால் கூத்துக்கள் நிகழ்த்தப்பட்ட போது இசையுடன் கூடிய பாடல்களே கூத்துக்களுக்கு உதவியிருக்க வேண்டும். கூத்தின் பின்னணியாக அமைந்த பாடல்கள் பொதுவாக - „கொளை" என்று பெயர் பெற்றன.

வளர்ச்சி நிலையில் „கொண்டுநிலை" போன்ற பாடல் வகைகள் குரவை போன்ற கூத்துகளுக்கென்றே அமைந்தன. அவையே பிற்காலத்தில் குரவை செய்யுட்களாக வளர்ந்து சரிந்துபோக இருந்த குரவை போன்ற கூத்துக்களுக்குப் புத்துயிர் ஊட்டின.

இவ்வாறாக இசை கூத்தின் ஒரு கூறாக அமைந்து, கூத்துக்கலை ஒரு கவின் கலையாகத் திகழ மிகவும் உதவியுள்ளது என்பதை அறிவிக்கிறது.

**பழந்தமிழ்க் கலைவாணர்கள் :**

இசையும் எல்லோராலும் கையாளத்தக்க கலையல்ல. பழந்தமிழகத்தில் சிறுபாணர், பெரும்பாணர், இசைப்பாணர், யாழ்ப்பாணர் என்ற இசை வகையினரும், பறையர், துடியர், கிணைஞர், வயிரியர் என்னும் கருவிசையாளர் வகையினரும், அவரவர் கலைகளை வாழ்க்கைத் தொழிலாகக் கொண்டு வாழ்ந்திருக்கின்றார்கள். அக்கலை வகுப்பினர் ஒருவரோடொருவர் இணைந்து வளப்படுத்திய கலைவடிவங்கள் இன்றைக்கு ஏறத்தாழ மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மிகச்செம்மையாகவும், இலக்கண நுட்பங்கள் கொண்டவையாகவும் விளங்கின என்பதை,

**"பாணர் கூத்தர் விறலியர் என்று இவர்
பேணிச் சொல்லிய முறை"**

என்னும் தொல்காப்பிய நூற்பாவின் மூலம் அறியக்கிடக்கின்றது. தலைமுறை தலைமுறையாக அக்கலைப் பரம்பரையினரால் பண்படுத்தி வளர்க்கப்பட்ட இசை, "பண்" என்றுஅழைக்கப்பெற்றன.

அறிவியல் நோக்கில் அவ்விரு கலைகளும் வெவ்வேறாகக் கொள்ளப்படினும், உணர்வினும், உறவுநிலையிலும் அவை ஒன்றோடொன்று மிக நெருக்கமான இணைவுடைய கலைகள் என்பது கலையுலகம் கண்ட உண்மையாகும்.

**கூத்தர் பயன்படுத்திய இசைக்கருவிகள் :**

கூத்தர் பயன்படுத்திய இசைக்கருவிகள்.

தோல்கருவிகள். துளைக்கருவிகள் .கஞ்சக்கருவிகள்

அக்கால மக்களாலும், வீரர்களாலும், கலைஞர்களாலும் பயன்படுத்தப்பட்ட முழவு, ஆகுளி, எல்லரி, குழல், குறும்பரந்தூம்பு, சிறுபறை, சீறியாழ் தட்டை, தண்ணுமை, துடி, தூம்பு, பதலை, பன்றிப்பறை, பாண்டியல், பேரியாழ், திவவு, கரடிகை என்னும் இசைக் கருவிகளைக் கூத்தர்கள் பயன்படுத்தினர்.

தோற்கருவிகள்


http://Creativecommons.org//license/by/4.0/.

தோற்கருவிகள் மரத்தினால் செய்யப்பட்டுத் தோலால் கட்டப்பட்டவை. தோல்கருவிகளின் வகைப்பாட்டினை அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார உரையில்,

**“பேரிகை படகம் இடக்கை உடுக்கை**
**சீர்மிகு மத்தளம் சல்லிகை கரடிகை**
**திமிலை குடமுழா தக்கை கணப்பறை**
**தமருகம் தண்ணுமை தாவில் தடாரி**
**அந்தரி முழவொடு சந்திர வளையம்**
**மொந்தை முரசே கண்விடு தூம்பு**
**நிசாளம் துடுமை சிறுபறை அடக்கம்**
**ஆசில் தகுணிச்சம் விரலேறு பாகம்**
**தொக்க உபாங்கம் துடிபெரும் பறையென**
**மிக்க நூலோர் விரித்துரைத் தனரே” (சிலம்பு.3:27)**

விளக்குகிறார். அவையாவன பேரிகை, படகம், இடக்கை, உடுக்கை, மத்தளம், சல்லிகை, கரடிகை, திமிலை, குடமுழா, தக்கை, கணப்பறை, தமருகம், தண்ணுமை, தடாரி, அந்தரி, முழவு, சந்திரவலையம், மொந்தை, முரசு, கண்விடுதூம்பு, நிசாளம், துடுமை, சிறுபறை, அடக்கம், தகுணிச்சம், விரலேறு, பாகம், உபாங்கம், நாழிகைப்பறை, துடி, பெரும்பறை.

அவற்றில் மத்தளம், சல்லிகை, இடக்கை, கரடிகை, படகம், குடமுழா என்பன இசைப்பாட்டிற்குப் பக்க வாத்தியமாக உள்ளவை. அவை „அகமுழவு" எனப்படும். தண்ணுமை தக்கை தகுணிச்சம் என்பன மத்திமமான கருவிகள். அவை „அகப்புறமுழவு" எனப்படும். கணப்பறை முதலியன அதமக்கருவிகள். அவை "புறமுழவு" எனப்படும்.

### காரணப்பெயர் பெற்ற தோல் இசைக்கருவிகள்:

மத்தளம், சல்லிகை, கரடிகை என்பன ஓசையினால் பெற்ற காரணப் பெயர்களாகும். “மத்து என்னும் ஓசையினால் மத்தளம் என்னும் பெயர் உண்டாயிற்று. சல்லென்னும் ஓசையையுடையதனால் சல்லிகை என்னும் பெயர் பெற்றது. கரடி கத்தினாற் போலும் ஓசையுடைமையால் கரடிகை என்னும் பெயர் பெற்றது.”7

**பறை :**

பண்டைத்தமிழரின் ஐந்திணைப் பாகுபாட்டின் கருப்பொருள்களுள் ஒன்றாகப் பறை வழங்கி வந்தது. ஐவகை நிலத்திற்குரிய பறையாக, குறிஞ்சி நிலத்திற்குத் தொண்டகப் பறையும், முல்லை நிலத்திற்கு ஏறுகோட் பறையும், மருத நிலத்திற்கு நெல்லரி பறையும், நெய்தல் நிலத்திற்கு நாவாய்ப் பறையும், பாலை நிலத்திற்குத் திரைகோட் பறையும் வழக்கிலிருந்தன. மலைபடுகடாமில் தொண்டகப் பறையை சிறுபறை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**“கடும்பறைக் கோடியர் மகா அர் அன்ன”8**
**“பன்றியப்பறையும் குன்றகச் சிலம்பும்”9**

இங்கு மயில்கள் ஆடுகின்ற ஓசையினை, சோம்பையும், மஞ்சளையும் விதைத்து வளர்த்த பின்பு அவற்றைக் காட்டுப்பன்றிகள் நெருங்காமல் காப்பவர்கள் அடிக்கின்ற ஓசையையும் புலப்படுத்துகின்றது.

புறநானூற்றில் காணப்படும் இசைக்கருவிகளுள் பறையே அதிகம் இடம் பெற்றுள்ளது. அரிப்பறை, அனந்தப்பறை, ஆகுளிப்பறை, ஒருகட்பறை, சல்லிப்பறை, சாக்காட்டுப்பறை, செருபறை, தடாரிப்பறை,


http://Creativecommons.org//license/by/4.0/.

நெய்தற்பறை, போர்ப்பறை, மணப்பறை என்பன போன்று பல்வகையான பறையானது புறநானூற்றில் தென்படுகின்றன. அவற்றுள் „அனந்தப்பறையானது" போர்க்களத்தில் ஒலிக்கப் பெறுவனவாக உள்ளது.

**"எடுத்தெறி யனந்தற் பறைசீர் தூங்க"**10

இப்பாடலானது போர்க்களத்தில் ஒலிக்கப்படும் அனந்தப்பறையின் ஒலி கேட்டு ஆடும் பேய்மகளின் நிலையை வர்ணிக்கிறது.

**கயிறாடுபறை**

**"கழைக் கூத்திலே கயிற்றின் மேல் நடக்கும் பொழுது பறையைக் கொட்டிக் கொண்டே நடப்பது ஒரு வகை ஆடல். இதனை ஆரியர் ஆடினர் என்பர்"**11 எனத் தமிழிசைக் கலைக்களஞ்சியம் குறிப்பிடுவதை குறுந்தொகைப் பாடலிலும் காணமுடிகிறது.

**"வில்லோர் காலன கழலே**
**……… ஆரியன் கயிறாடு பறையின்**
**கால் பொரக் கலங்கு"**12

கயிறாடும் போது கடுங்காற்று வீசவே பறை கலங்கியது போன்று கலங்கினாள் என்பது அதன் பொருள். வெள்ளிவீதியார் வற்புறுத்தியும் தோழிக்குத் தலைமகள் சொல்லியது என்னும் கூற்றிலமைந்த பாலைத்திணைப் பாடலில் வாகை மரத்தின் முதிர்ந்த நெற்றுக்களை உடைய கொத்து, கூத்தர் ஆடும் களத்தில் கொட்டும் பறையைப் போல் விட்டுவிட்டு ஒலிக்கும் என்பதை,

**"பாடல் உரீஞ்சல் வினை நெற்றி அம் துணர்**
**ஆடுகளப் பறையின் அரியென ஒலிப்ப"**13

என்னும் அடிகள் புலப்படுத்துகின்றன. இதே கருத்தை காவன் முல்லைப் பூதஞ்சேந்தனாரின் பாடலிலும் காண முடிகிறது.

மன்னர்கள் ஆட்சி புரிந்த அக்காலத்தில் மக்களிடம் சொல்லும் செய்திகள் அனைத்தும் பறை அறைந்தே தெரிவிக்கப்பட்டதை அறியமுடிகிறது. அன்றைய சூழ்நிலையில் யானையானது மதங்கொண்டு தெருவுக்குள் வருகிறது எனில் அரண்மனையில் உள்ளவர்கள் பறை சாற்றித் தெரிவிப்பார்கள். அழகுடைய பெண்கள் தெருவில் வந்தால் அவர்களைக் கண்டு பலர் மயக்கம் கொள்வர். இதனைத் தடுக்க மன்னன் யானை வரும் வேளையில் எவ்வாறு பறை அறிவித்துத் தெரிவித்ததோ அதனைப் போல தெரிவித்திருக்க வேண்டும் என்கிறது கலித்தொகை. மேலும் வலிமையான ஏற்றினை அடக்க வீரர்களைப் பறைசாற்றி அழைத்தமையையும் சுட்டுகின்றது.

**துடி**

மரத்தால் செய்யப்பட்ட தோல் வார்களால் இறுகவலித்தும் நுண்ணிய நூலாலும் கட்டப்பட்ட கருவி. இது சிறுபறை, கொம்பு, தொண்டகப்பறை, வயிர் போன்ற பிற கருவிகளோடு சேர்ந்து இசைக்கப்பட்டது. இக்கருவியைக் கொட்டுவோன் துடியன் என்று அழைக்கப்பட்டான்.

**"துடிக்கண் அன்ன குறையொடு விரைஇ"**14

இங்கு வரால் மீன்களை நறுக்கினால் கிடைக்கும் துண்டுகள் துடி என்னும் இசைக்கருவியின் கண்கள் போன்றிருக்கும் என்னும் செய்தி வெளிப்படுகிறது.

**தண்ணுமை**

இக்கருவி தோலால் போர்த்தப்பட்ட இரண்டு முகங்களையும் இருபுறம் குவிந்துள்ள நீண்ட உடலினையும் கொண்டது. தோல்வாரால் நன்கு இழுத்துக்கட்டப்பட்டுள்ளது.

**"வெண்ணெல் அரிநர் தண்ணுமை வெரீஇ"**15



http://Creativecommons.org//license/by/4.0/.

இங்கு வெண்மையான நெல்லை அறுக்கும் உழவர்கள் நெல்லினைக் கொட்டுகின்ற ஓசையை உணர்த்துகிறது.

**முழவு**

இது தோல் கருவி. இதற்கு மத்தளம் என்ற பெயரும் உண்டு. இக்கருவி விரலினாலும் குறுந்தடி கொண்டும் முழக்கப்படுகிறது. இதன் கண்பகுதி மண்ணால் வயைப்பட்டுள்ளது.

**"பண் அமைத்து திண்வார் விசித்த முழவொடு"16**

என்ற பாடல் அடியில் பண்கள் உண்டாவதற்குத் திண்ணிய வாரால் இறுகவலித்துக் கட்டப்பட்ட கண் என்னும் உறுப்பினையுடைய மத்தளம் என்றும்,

**"சுரம் செல் கோடியர் முழவின் தூங்கி"17**

கூத்தருடைய மத்தளங்கள் காவடியில் தொங்குவது போல் பழுத்த பலாப்பழங்கள் மலையில் தொங்குகிறது என்பதை,

**"முழவுத்துயில் அறியா வியலுள் ஆங்கண் விழவின் அற்று"18**

என்பதனை மகளிர் ஆடுவதற்கேற்ற முழவு உறக்கம் அறியாத ஊரின் கண் கொண்டாடப் பெறும் திருநாளைப் போலச் சிறந்த தன்மைகளை உடையது என்றும்,

**"மண்னமை முழவின்தலை கோல்கொண்டு"19**

மண் பூச்சாகிய செறிந்த முழவு தொங்கும் காவடியின் மூங்கிலை நும் கையில் கொண்டு ஊன்றிச் செல்லுக என்ற கருத்து விளக்கப்பட்டுள்ளது.

புறநானூற்றில் தோற்கருவிகளில் தலையானது முழவு எனக்காட்டி, வாழ்வின் எல்லா நிலைகளிலும் தமிழர் „முழவு" எனும் இசைக்கருவியைப் பயன்படுத்தியதை,

**"ஓரினெய்தல் கறங்க வோரில்**
**ஈந்தண் முழவின் பாணி ததும்ப"20**

என்ற பாடலடிகள் நிலையாமையை ஒன்றித் திகழ்வதைப் பறைசாற்றுகிறது.

**கணப்பறை**

கணப்பறை தோற்கருவிகளுள் ஒன்றாகும். "கணம் என்பது நொடியில் பாதியளவு ஆகும். இக்கால அளவில் கொட்டும் பறை. ஆதலால் இப்பெயர் பெற்றது."21

கணப்பறையைத் திருப்புகழில் அருணகிரியாரும் சத்தம் என்று அடைமொழி வழங்கி இருபாடல்களைப் பாடி உள்ளார்.

**"சிறுபறையும் முரசு துடி**
**சத்தக் கணப் பறையும்**
**மொகு மொகு என அதிர"22**
**"சத்தக் கணப் பறைகள் மெத்தொனித்து அதிர"23**

இப்பாடலிலிருந்து நல்ல ஓசையில் ஒலிப்பது கணப்பறை என்றறியலாம். அகநானூற்றுப் பாடல்களிலும் கணப்பறை பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

வரைவிடை வைத்துத் தலைவன் பிரிந்த பொழுது தோழி தலைவனை இயற்பழிக்க, தலைமகள் இயற்பட மொழிந்தது என்னும் கூற்றமைந்த வெறி பாடிய காமக் கண்ணியாரின் குறிஞ்சித் திணைப் பாடலில் „கணம்கொள் இருவி" என்றும் இடம் பெற்றுள்ளது,

**"அணங்குடை நெடுவரை உச்சியின் இழிதரும்**
**கணம்கொள் அருவிக் கான் கெழு நாடன்"24**



http://Creativecommons.org//license/by/4.0/.

தலைவி, தோழியிடம் தலைவன் நாட்டைப் பற்றிக் கூறும் பொழுது "நீண்ட மலை உச்சியிலிருந்து விழும் அருவிக் கூட்டங்களைக் கொண்ட காடு" என்று விளங்குமிடத்து „கணம்" எனும் இசைக்கருவி எழுப்பும் ஓசையைப் போல் ஓசை எழுப்பும் அருவிகளை உடைய நாட்டிற்கும் சொந்தக்காரன் எனக் குறிப்பிடுகின்றாள்.

**தட்டைப்பறை**

சங்க காலத்தில் தினைக்கதிரை கவர வரும் கிளிகளை விரட்ட மூங்கிலால் பிளந்து செய்த கருவிகளைப் பயன்படுத்துவர். இதனைத் „தட்டைப்பறை" என்றும் அழைப்பர். இதன் வளர்ச்சியே கிட்டித் தாளமாகும். வீரை வெளியன் தித்தத்தனார் என்ற புலவர் இரவில் சிறைப்புறமாகத் தோழிக்குச் சொல்லியது என்னும் கூற்றமைந்த குறிஞ்சித் திணைப் பாடலில் „தட்டைஓப்பியும்" என்று கூறியுள்ளார். தலைவி தினைப்புனம் காக்கும் பொழுது தடியினைச் சுற்றியும் தட்டையினை அடிப்பாள் என்பதை,

**"தழலை வாங்கியும் தட்டை ஓப்பியும்"25**

என்று குறிப்பிடப்பட்டுள்ளதை அறியலாம். தழலென்பது "கையாற் சுற்றும் போது தன்னிடத்துப் பிறக்கும் ஓசையாற் கிளி முதலியவற்றை ஓட்டும் கருவி" தட்டை யென்பது "கிளி கடி கருவியாகிய தட்டைப்பறை" என்ற அகநானூறு உரையால் அறியமுடிகிறது.

**முரசு**

மிகப்பெரிய ஒருமுகத் தோற்கருவி. பகைவரின் காவல் மரத்தை வெட்டி வந்து செய்யப்படும் இது மிகுந்த மாட்சிமைக்கும் வணக்கத்திற்குமுரியது.

இதற்கு குருதிப் பலியூட்டப்படுவதும் உண்டு எனத் தமிழிசைக் கலைக் களஞ்சியம் கூறுகிறது.

சேரலாதன் பகைவரை வென்று கடம்ப மரத்தை வெட்டிச் செய்த முரசின் ஓசை போல பழமையான ஊரில் சேரிப் பெண்டிர் பேசிய பழிச் சொல்லால் தலைவன் பிரிந்து சென்றான் என்ற கருத்தினை,

**"........................ சேரலாதன்**
**மால்கடல் ஓட்டி, கடம்பறுத்து இயற்றிய**
**பண்ணமை முரசின் நாண் அதிர்ந்தன்ன**
**கவ்வை தூற்றும் வெவ்வாய்ச் சேரி**
**அம்பல் மூதூர் அலர் நமக்கு ஒழிய"26**

என்ற அகநானூறு சுட்டுகிறது.

**மயிர்க்கண் முரசு**

புலியோடு போரிட்டு வென்ற எருதின் மயிர் சீவாத தோலினால் வீர முரசம் போர்த்;தப்படும். அதற்கு மயிர்க்கண் முரசம் என்று பெயர்.

**"ஓடா நல்லேற்று உரிவை தைஇய**
**ஆடு கொள் முரசம் இழுமென முழங்க"27**

என்ற முல்லைத் திணைப் பாடலில் மதுரைக் கூத்தனார் "புறங்காட்டி ஓடாத கொல்லும் தொழிலை உடைய வீரமிக்க ஏற்றினது தோலை சீவாமல் போர்த்திய முரசம் ஒலிக்கப் பகைவரை வென்று அவர் தம் நாட்டினைத் திறமையாகக் கொண்டோம்" என்று மயிர்க்கண் முரசம் பற்றிக் குறிப்பிடுகின்றார்.

எட்டுத்தொகையுள் பரிபாடல் இயற்றன்மையும், இசைத்தன்மையும் விரவிய பாடல் தொகுப்பாக அமைந்துள்ளது. பரிபாடலைப் பாடியவர்களுள் கேசவனார் தாம் பாடிய பாடலுக்குத் தாமே இசை வகுத்துள்ளார். கேசவனார், நல்லச்சுதனார், கண்ணகனார் ஆகியோர் இயலிசைத் துறைகளில் வல்லவர் என்பதை அறியலாம்.


http://Creativecommons.org//license/by/4.0/.

**“விரல்செறி தூம்பன் விடுதுளைக் கேற்ப**
**முரல்குரல் தும்பி அவிழ்மலர் ஊத**
**யாணர் வண்டினம் யாழிசை பிறக்கப்**
**பாணி முழவிசை அருவிநீர் ததும்ப**
**ஒருங்கு பரந்தவை யெல்லாம் ஒலிக்கும்**
**இரங்கு முரசினான் குன்று”28**

என நல்லச்சுதனார் பாடும் பரிபாட்டு ஆழ்ந்த இசைக் கருத்துடையது. ஒரு தும்பியின் பின்னணி ஊதலை நிலைக்களமாகக் கொண்டு வண்டுகள் தொடர்ந்து இன்னொலி செய்கின்றன. மிடற்றுப் பாடகன் இவற்றைத் தன் குரலுக்கேற்ப ஒலியாக ஆக்கிக் கொண்டான்.

விடியற் காலையில் மருதப் பண்ணும், மாலையிற் செவ்வழிப் பண்ணும், நள்ளிரவிற் குறிஞ்சிப் பண்ணும், பகற்காலத்தில் நைவளப் பண்ணும் இசைத்தல் குறித்து எட்டுத்தொகை உணர்த்தும்.

**“மணியணி யானைமிசை மைந்தரும் மடவாரும்**
**நிரைநிரை குழீஇயினர் உடன் சென்று**
**குருமணி யானை இயல்தேர்ப் பொருநன்**
**திருமருத முன்றுறை முற்றங் குறுகித்**
**தெரி மருதம் பாடுப ...............”29**

என்ற பரிபாடலில் வையையாற்றில் மருத முன்றுறையில் பாணர்கள் மருதப் பண்ணைப் பாடப்பாட மகளிரும் மைந்தரும் ஊடியும், கூடியும், தேடியும், சிதைந்தும், சூடியும், தொழுதும், ஆடி மகிழ்ந்து தன் மகிழ்வை இசையால் வெளிப்படுத்தினர்.

**துளைக்கருவிகள்:**

புல்லாங்குழல், நாதசுரம், முகவீணை, மகுடி, தாரை, கொம்பு, எக்காளம் முதலியன. அவை மரத்தினாலும், உலோகத்தினாலும் செய்யப்படுவன. சங்கு இயற்கையாக உண்டாவது ஆகும்.

**குழல்:**

இக்கருவி மூங்கிலால் செய்யப்பட்டது. இசைக்கருவிகளில் நரம்பிசைக் கருவியான யாழுக்கு அடுத்த நிலையில் இருப்பது குழல் ஆகும். திருக்குறளில் மக்கட்பேறு அதிகாரத்தில் குழலின் இனிமை பற்றி,

**“குழலினிது யாழினிது என்ப தம்மக்கள்**
**மழலைச் சொல் கேளாதவர்”30**

என்று வள்ளுவர் கூறுகிறார். தம் புதல்வருடைய மழலைச் சொற்களைக் கேளாதவரே குழலிசை இனிது, யாழிசை இனிது என்பர். இங்கு குழலின் பின்னர் யாழ் வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. பாட்டைச் சுருதி குறையாமல் கைக்கொண்டு பிற உயிர்களை ஈர்க்கும் இனிய குழல் என்பதை,

**“விளிப்பது கருவம் தீம்குழல் துதைஇ”31**

என மலைபடுகடாம் உணர்த்துகிறது. குழலின் இசையினைப் பெண்ணின் அழுகை ஓசையுடன் ஒப்பிட்டு இரங்கி ஒலிக்கும் வண்ணம் அமைந்த ஓசையையும் பெற்றுள்ள கருவியாக புறநானூறு சுட்டுகிறது.

**“குழலினை வதுபோ லழுதனள் பெரிதே”32**

மேய்ச்சல் சமூகம் உருவாகிய போது ஆடு, மாடுகளை கொண்டு உற்பத்தி முறையை உருவாக்கிக் கொண்ட சமூகம் கால்நடைகளை வளர்ப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் சில கருவிகளை கையாளத்


http://Creativecommons.org//license/by/4.0/.

துவங்கியது. நீண்டு வளர்ந்த கொன்றைக் காயைக் கொண்டு நல் இசை தரும் குழலினையும் உருவாக்கியுள்ளதை,

**“கழுவொடு சுடுபடைசுருக்கிய தோற்கன்**
**இமிழ் இசை மண்டை உறியொடு தூக்கி**
**ஒழுகிய கொன்றைத் தீங்குழல் முரற்சியர்”33**

என்ற கலித்தொகைப் பாடலானது குழலின் பெருமையினை எடுத்தியம்புகின்றது. 185

**கண்விடுதூம்பு :**

கண்விடுதூம்பு என்பது துளையை அகத்தே உடைய சிறிய முழவாகும் எனத் தமிழிசைக் கலைக்களஞ்சியம் கூறுகிறது.

காட்டின் கவின் மிகு காட்சியைக் கபிலர் வருணிக்கும் பொழுது, “அருவியின் ஓசை, கூட்டமான மத்தளங்களின் இசையாக உள்ளது என்பதை,

**“பாடு இன் அருவிப் பனிநீர் இன்னிசை**
**தோடமை முழவின் தூதை குரல் ஆக**
**கணக் கலை இகுக்கும் கடுங்குரற் தூம்பொடு”34**

என எடுத்தியம்புகின்றார். மற்றொரு பாடலில் யானை நீருக்காக அலைகிறது. ஞெமை மரத்தில் பின்னப்பட்ட சிலந்திக் கூட்டினை மேகமென்று எண்ணி துதிக்கையை உயர்த்திப் பிளிறும் ஓசை புரவலரின் புகழினைத் தொகுத்துக் கூறும் தூம்பினைப் போல ஒலித்தன என்பதை பாலை பாடிய பெருங்கடுங்கோ

**“செறிநடைப் பிடியொடு புணர்ந் தென்னக்**
**குறு நெடுந் தூம்பொடு முழவுப் புணர்ந்திசைப்ப”35**

எனக் குறிப்பிடுகிறார்.

**கஞ்சக்கருவிகள்:**

இவை வெண்கலத்தால் செய்யப்படுவன. தாளம், குண்டுதாளம், பிரமதாளம், ஜாலர் முதலியன. இசைக்கருவிகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமான இசையை உண்டாக்கும் தன்மையுடையன. இன்னின்ன கூத்துக்களுக்கு இன்னின்ன இசை என்று பகுத்து இசைத்தனர்.

கிட்டித்தாளம்:

கிட்டி என்ற சொல்லுக்குக் கவ்விப் பிடிக்கும் என்று பொருள். இது மரப்பலகையில் செய்யப்பட்ட தாளக் கருவியாகும். இன்று பிச்சையெடுப்போர் இதனைப் பயன்படுத்துகின்றனர். இக்கருவியினை விரல்களுக்கு இடையில் பிடித்து நுனிப்பகுதிப் பலகையைத் தட்டினால் ஏற்படும் மோதலில் ஒலி பிறக்கும். பிரான்சு நாட்டு „காஸ்டா" என்னும் தாளக் கட்டைகள் இவ்வகையைச் சார்ந்துள்ளது எனத் தமிழிசைக் கலைக் களஞ்சியம் விளக்கம் கூறுகிறது.

**பாணர்கள் பயன்படுத்திய இசைக்கருவிகள் :**

இசையையும், கூத்தையும் முழுவதுமாகத் தமது வாழ்வு எனக் கொண்டு வாழ்ந்த பழந்தமிழ் மக்களே மிகப் பழமையான காலத்தில் பாணர் என்ற பெயரால் குறிக்கப்பட்டனர். இவர்கள் பழுமரம் நாடும் பறவைகளைப் போல புரவலர்களை நாடிச் சென்று பெற்றது கொண்டு வாழ்ந்து வந்தனர். இவர்கள் வாழ்ந்து வந்த பகுதி „பாண்சேரி" எனப்பட்டது. (மதுரைக்காஞ்சி - 269, புறம் -348, பழமொழி நானூறு - 21)

**“பாணருளும் இசைப்பாணரும் யாழ்ப்பாணரும்**
**மண்டைப் பாணரும் என பலராம்”36**


http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME – III ISSUE - I
AUG -2025 E-ISSN : 2584 – 1238

என நச்சினார்க்கினியர் தொல்காப்பிய உரையில் குறிப்பிடுவதால் பாணருள் பல்வேறு வகையினர் இருந்தனர் என்பதை அறிய முடிகின்றது. வாய்ப்பாட்டிசைப்பவர், யாழ் என்ற நரம்பிசைக் கருவியை இசைப்பவர், மண்டை எனப்படும் தாளக் கருவியை இசைப்பவர் என்று பல வகையினர் இருந்தனர் எனப் பொருள் கொள்ளலாம். நரம்பிசைக் கருவியை இசைப்பவர்கள் வசிக்கும் கருவியின் அளவைக் கொண்டு இருவகையாகப் பிரிக்கப்பட்டிருந்தனர் என்பதைப் பத்துப்பாட்டின் இருபாடல்கள் வழி அறியலாம். இவர்கள் பல துறைகளில் தேர்ச்சி பெற்றிருந்தனர் என்பதை மலைபடுகடாம்,

**"துறை பல முற்றிய பைதீர் பாணர்"**37

என எடுத்தியம்புகின்றது. இவர்களது வாழ்வில் பெரும்பாலும் வறுமையே காணப்பட்டது. இதனைப் புறநானூற்றுப் பாடல் ஒன்று சிறப்பாகப் படம் பிடித்துக் காட்டுகின்றது.

**"கையது கடனிறை யாழே மெய்யது**
**புரவலர் இன்மையிற் பசியே அரையது**
**வேற்றிழை நுழைந்த வேர்நனை சிதாஅர்;** 187
**ஓம்பி உடுத்த உயவற் பாண!"**38

என்று ஆலத்தூர் கிழார் பாடியுள்ளார்.

ஒரு மனிதனின் பிறப்பு இறப்பு வரை இன்றைய நாளில் எவ்வாறு இசை இணைந்துள்ளதோ அவ்வாறே சங்ககாலப் பாடல்கள் வழி எல்லா சூழ்நிலைகளிலும் பாணர்கள் பங்கேற்றுப் பாடல்கள் பாடியும், ஆடியும், இசைக்கருவிகளை மீட்டியும் இருந்த நிகழ்வுகள் அறியக்கிடக்கின்றன. இதன் அடிப்படையிலேயே போர்க்களம் பாடுவோர், ஏர்க்களம் பாடுவோர், ஊடல் தீர்ப்போன் என்ற பிரிவுகள் ஏற்பட்டன. அரசர் அரசியுடன் அந்தப்புரத்தில் அந்தரங்கமாக இருந்த சூழ்நிலைகளில் கூட பாணர்கள் இசைக்கருவிகளை வாசித்து மகிழ்வித்தற்கான சான்றாதரங்கள் உள்ளன.

பாணர் பரம்பரையினர் யாழ் வாசிப்பவராக மட்டுமில்லை. தண்ணுமையும் வாசித்தனர் என்ற குறிப்பும் கிடைக்கிறது.

**"கன்றுபெறு வல்சிப் பாணன் கையதை**
**வள்ளுயிர்த் தண்ணுமை போல** ....."39

இன்றளவும் இப்பாணர் பரம்பரையினர் இருந்து வருகின்றனர். "தமிழ்ப்பாணர், „மேஸ்திரி" எனப்படுவர். இவர் திருநெல்வேலி, மதுரைக் கோட்டங்களில் தையற்காரர்களாய் உள்ளனர்" என்றும் „மலையாளப் பாணர் மந்திரவாதிகளும் பேயாடிகளுமாய் இருக்கின்றனர்" என்றும் புலவர் இரா.இளங்குமரன் அவர்கள் தமது பாணர் என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். (ப.147). இஸ்லாமிய பாணர்களும் உண்டு. இவர்கள் ஃபக்கீர் (குயமசை) என்று அழைக்கப்படுகின்றனர். (ஃபக்கீர் என்றால் சந்நியாசி என்ற பொருளும் உண்டு).

**நரம்புக்கருவிகள்**

மரத்தினால் செய்யப்பட்டு நரம்புகள் அல்லது கம்பிகள் பூட்டப்பட்டவை. யாழ், வீணை, தம்பூரா, கோட்டுவாத்தியம், பிடில் முதலியன நரம்புக் கருவிகளாம்.

**யாழ்**

யாழ் தமிழர்களின் முக்கிய இசைக்கருவியாகப் போற்றப்பட்டுள்ளன. ஆகையினால் யாழ் பற்றிய பல்வேறு நூல்கள் தோன்றி இருக்கின்றன.

பெரும்பாலான காப்பியங்களில் யாழ் பற்றிய செய்திகள் இடம் பெறுகின்றன. வகைவகையான யாழமைப்புகளும் வழக்கில் இருந்திருக்கின்றன. அறிவனார் என்பதால் இயற்றப்பட்ட இசைத்தமிழ் நூல் பஞ்சமரபு. இதில் யாழ் பற்றிய செய்திகள் இடம்பெறுகின்றன. யாழின் வகைகளாக,


http://Creativecommons.org//license/by/4.0/.

**“பேரியாழ் பின்னும் மகரம் சகோடமுடன்**
**சீர்பொலி செங்கோடு செப்பினர் - தார் பொலிந்த**
**மன்ன திருமாற வண்கூடற் கோமானே**
**இன்னம் உளவேசில”**40

சிலப்பதிகாரம் தொடங்கி பெருங்கதை வரையிலான நூல்களில் காணப்படும் எல்லா யாழ்ப் பெயர்களும் இப்பாடலில் வருகின்றன. ஆனால் இப்பாடலை நன்கு கூர்ந்து கவனித்தால் ஒரு உண்மை புலப்படும். இப்பாடலில் தரப்பட்டிருப்பவை பொதுவான யாழின் வகைகளாக இல்லை மாறாக பேரியாழின் வகைகள் ஆகும் என விபுலானந்த அடிகள் தமது யாழ் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

சங்க இலக்கியங்கள் முழுமையிலும் பேரியாழும் சீறியாழுமே குறிப்பிடப்பட்டிருந்த போதும் இச்செய்யுளில் அப்பெயர்கள் இடம்பெறவில்லை. மேற்குறிப்பிட்ட யாழ்வகைகள் பேரியாழின் வகைகள் என்ற காரணம் கருதியேயாகும். „இன்னம் உளவே சில" எனுமிடத்தில் இப்பேரியாழுக்கு பெருங்கலம், ஆதியாழ், கோடபதி, நாரதப் பேரியாழ் என்பன இன்னும் பல பெயர்களும் உண்டு என்பதை அறியலாம். நரம்புகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் பேரியாழ் என்ற பெயர் பெற்றிருக்கலாமோ என்றும் எண்ணத் தோன்றுகிறது.

**“ஆயிர நரம்பிற் றாதி யாழாகும்”**

எனக் கூறுகிறது பிங்கலந்தை நிகண்டு.

**“புலமகளாளர் புரிநரம்பு ஆயிரம்**
**வலிபெறத் தொடுத்த வாக்கமை பேரியாழ்”**

எனப் பேரியாழின் நரம்புகளைப் கொங்குவேள் மாக்கதை சுட்டுகிறது.

தொகுப்புரை

- இசை அனைவரையும் தன்பால் இசைய வைக்கும் தன்மையுடையது. அப்படிப்பட்ட இசையானது ‘கூத்து’ சிறக்க இன்றியமையாததாகிறது.
- இசையும் கூத்தும் ஒன்றோடு ஒன்று பின்னிப்பிணைந்து காணப்படுகிறது. இசையில்லாக் கூத்து எங்கும் காணப்படவில்லை. இசையோடு கலந்த கூத்துக்கள் மக்களின் மனதை இன்பமூட்டியுள்ளன.
- கூத்துக்கலைஞர்களும் இசைவாணர்களும் தொழில்முறையில் இணைபிரியாது வாழ்ந்துள்ளனர். ‘கூத்துக்களை நிகழ்த்தும் கலைஞர்களை எவ்வாறு பாணர், பொருநர், விறலி என வகைப்படுத்துகிறாமோ அதைப்போல, இசைக்கருவிகளை இசைப்போரும், கருவிகளின் தன்மைக்கு ஏற்ப கோடியர்,வயிறியர், கண்ணுளர் என பெயர் பெற்றிருந்தனர்.
- ஒவ்வொரு கூத்துக்கும் தனித்தனியே பக்கவாத்தியங்கள் வரையறுக்கப்பட்டு இசைக்கப்பட்டது.
- கூத்துக்கலைக்கென தனியே நூற்கள் இருந்ததைப்போல ‘இசை’க்கும் தனியான நூற்கள் இருந்திருக்கின்றன.
- இசைக்கருவிகள் தோற்கருவிகள், துளைக்கருவிகள், கஞ்சக்கருவிகள், மிடற்றுக்கருவிகள் என வகைப்படுத்தப்பட்ட பல்வேறு இசைக்கருவிகள் புழக்கத்தில் இருந்திருக்கின்றன.

**குறிப்புகள்**

1) தொல். எழுத்து. 33
2) இராகவன், இசையும் யாழும், ப.42
3) தொல்.பொருள். 18



http://Creativecommons.org//license/by/4.0/.

4) இராகவன், மு.நூ., ப.43
5) சோமசுந்தரனார் (உ.ஆ) மதுரைக்காஞ்சி பா.எ614
6) சோமசுந்தரனார் (உ.ஆ) கலித்தொகை பா.எ108
7) சீனிவேங்கடசாமி, தமிழர் வளர்த்த அழகுக்கலைகள், ப.126 -127
8) மலைபடுகடாம், 236
9) மேலது, 344
10) புறம், 62
11) தமிழிசைக் கலைக்களஞ்சியம் ப.41
12) குறுந். 7:3
13) அகம். 45:1-2
14) மலைபடுகடாம், 458
15) மேலது, 471
16) மேலது, 3
17) மேலது, 143
18) மேலது, 350
19) மேலது, 370
20) புறம், 194
21) தமிழிசைக் கலைக்களஞ்சியம் தொகுதி ஐ - ப.251
22) திருப்புகழ், 139
23) மேலது, 923
24) அகம். 22: 1-2
25) மேலது, 186 : 11
26) மேலது, 397 : 4-7
27) மேலது, 334 :1-2
28) பரிபாடல், 21:33-38
29) மேலது, 2:69-73
30) குறள், 66
31) மலைபடுகடாம், 8
32) புறம், 143
33) கலி, 106
34) அகம், 82: 3-5
35) மேலது, 30: 16-17
36) தொல்.புறத்.36.(நச்.உரை)
37) மலைபடுகடாம்,40
38) புறம், 62
39) நற்றிணை 310, அகம், 381
40) பஞ்சமரபு, பா.7


http://Creativecommons.org//license/by/4.0/.